# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 26.02.2026**

**சி.சி.எண். 209/2024**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**அ.சா.1 சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கும், எதிரி கருப்பசாமிக்கும் 08.02.2006ம்தேதி திருமணம் நடைபெற்றதிலிருந்து திருப்பூரில்தான் நாங்கள் குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான். என் அம்மா, அப்பாவுடன் சேர்ந்து நாங்கள் டெய்லரிங் வேலை செய்துவந்தோம் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறிய விபரத்தைதான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். பொதுவாக எங்கள் சமுதாயத்தில் திருமணம் நடைபெறும்போது கொடுக்கப்படும் சீர்சீராட்டுகள் பற்றி எழுதிவைப்பார்கள் என்றால் சரிதான். அவ்வாறு எனது திருமணத்தின்போது கொடுக்கப்பட்ட சீர்சீராடகள் பொறுத்து எழுதிவைக்கப்பட்ட ஆவணம் எதையும் போலீசாரிடமோ, நீதிமன்றத்திலோ சமர்ப்பித்தேனா என்றால் இல்லை. 2010ம் வருடம் எனது கணவர் எனக்கு எதிராக விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்ததிலிருந்து நான் அவருக்கு எதிராக புகார் அளித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் அவ்வாறு எங்கெல்லாம் புகார் கொடுத்தேன் என்றால் முதலில் சங்கரன்கோவிலில் புகார் கொடுத்தேன். பின்பு சிவகிரியில் புகார் கொடுத்தேன். அதன்பிறகு திருநெல்வேலியிலும், திருப்பூரிலும், கரிவலம்வந்தநல்லூரிலும் புகார் கொடுத்தேன். திருப்பூரில் புகார் கொடுத்தபோது சங்கரன்கோவிலில் வழக்கு பதிவுசெய்யப்பட்டதாக சொன்னார்கள். என் கணவர் விவாகரத்து வழக்கு போட்டதிலிருந்து நான் அவருடன் தற்போது சேர்ந்துவாழவில்லை என்றால் சரிதான். நான் எனது அம்மா, அப்பாவுடன் தற்போது திருப்பூரில் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் போலீஸ் விசாரணையில் எங்கெங்கு புகார் கொடுத்தேன் என்ற விபரத்தையும், எப்போது புகார் கொடுத்தேன் என்ற விபரத்தையும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். இவ்வழக்கின் சாட்சி பச்சைக்கிளி எனது அம்மா என்றால் சரிதான். பொன்னுத்தாய் எனது பெரியம்மா என்றால் சரிதான். தங்கதுரை மற்றும் கள்ளவாண்டநாடார் ஆகியோர் எங்கள் உறவினர்களாஎன்றால் தங்கதுரை எனது தந்தைக்கு அண்ணன் வகை

உறவினர். கள்ளவாண்டநாடார் எங்கள் ஊர் நாட்டாமையாக இருந்தவர். நாங்கள் 1ம் எதிரிக்கு நகை மற்றும் பணம் கொடுத்ததை நேரடியாக பார்த்த சாட்சிகள் உண்டா என்றால் வீட்டில் இருந்தவர்கள்தான் பார்த்தார்கள். வெளிநபர்கள் யாரும் பார்க்கவில்லை. எனக்கு வேறொரு நபருடன் தொடர்பு உள்ளது என்று தெரிவித்து எனது கணவர் எனக்கு எதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் அவ்வாறு கூறி அவர் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்திருந்தாரா என்றுஎனக்கு தெரியாது. அந்த விவாகரத்து வழக்கில் நான் ஆஜராகி கட்சி செய்து வந்தேன் என்றால் சரிதான். நான் தற்போது யாரை திருமணம் செய்துள்ளேன் என்றால் திருப்பூர் பக்கத்தில் உள்ள ஊரை சேர்ந்த சந்தோஷ் என்பவரை திருமணம் செய்துள்ளேன். நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்கள் பொய் என்றாலும், 1ம் எதிரிக்கு எந்த நகையும், பணமும் நான் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. பணம் மற்றும் நகை கோரி எதிரிகள் என்னிடம் பிரச்சனை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் நானும், எனது அப்பாவும் கேரளாவிற்கு எனது கணவரை தேடி சென்றதாக கூறினேனா என்றால் கூறவில்லை. தொழில் தொடங்குவதற்காக சீட்டு பணம் போட்டு அதிலிருந்து ரூபாய் 1 லட்சத்தை 1ம் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நானும், எனது குடும்பத்தாரும் 1ம் எதிரியை தரக்குறைவாக பேசியதால் 2007ம் வருடம் ஆகஸ்ட் மாதத்திலிருந்து அவர் என்னுடன் சேர்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. நானும், 1ம் எதிரியும் ஒருவருட காலத்திற்கு மேல் சேர்ந்து வாழவில்லை என்றாலும், அதனால்தான் வழக்கின் சம்பவங்கள் பற்றி நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. புகார் மனுவில் எந்த தேதியில் எங்கு வைத்து பணம் வாங்கியதாகவோ, சித்திரவதை செய்ததாகவோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அதனால்தான் நான் குறிப்பிட்டு நாள் மற்றும் நேரத்தை கூறவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்தேன் என்றாலும், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**